மீ.கு.எண். 5578/எம்5/2019

மீன்துறை இயக்குநர் அலுவலகம்,
நந்தனம், சென்னை—35.

நாள்.24.10.2019

அரசாணை (3டி) எண். 10, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(மீன்2) துறை, நாள். 01.10.2019 இத்துடன் இணைத்து வழங்கப்படுகிறது.

24/10/19
மீன்துறை இயக்குநருக்காக.

பெறுநர்

திருமதி பா.கயத்திரி, இளநிலை உதவியாளர், தலைமையலுவலகம்.

நகல்

'எம்' பிரிவு கண்காணிப்பாளர் தலைமை அலுவலகம்.

'எம்6' உதவியாளர் தலைமை அலுவலகம்

'எம் 5' இருப்பு கோப்பு

24/10/19

M5

16 OCT 2019

027549

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – மீன்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி. பா.காயத்திரி, இளநிலை உதவியாளர் – பணி வரன்முறைப்படுத்துதல் ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்–2) துறை

அரசாணை (3டி) எண்.10

நாள் 01.10.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
புரட்டாசி 14

படிக்கப்பட்டது :–

1. மீன்வளத்துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.5578/எம்.5/2018, நாள் 04.12.2018.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

-------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மீன்துறையில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த போது 05.12.2017 அன்று பணியிடை மரணமடைந்த திரு. அ.பாண்டியன் என்பவரின் சட்டபூர்வமான வாரிசுதாரரும் / மனைவியுமான திருமதி.பா.அகல்யா தனது மகளான செல்வி. பா.காயத்திரி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிடக் கோரி 28.02.2018 (மூன்றாண்டுகளுக்குள்) விண்ணப்பம் அளித்தார் என்றும், விண்ணப்ப நாளில் தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளின்படி அப்பணியிடத்திற்குத் தேவையான கல்வித் தகுதியையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016 பிரிவு 15 மற்றும் 20(6)(b)–இன்படி வயதுத் தகுதியையும் பெற்றிருந்ததன் அடிப்படையிலும் பிற வாரிசுதாரர்கள் தனியருக்கு பணி வழங்குவதில் எவ்வித மறுப்பும் இல்லை என சான்றளித்துள்ளதன் அடிப்படையிலும் அன்னாருக்கு கருணை அடிப்படையில் சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் 22.10.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும் இந்நேர்வில் தனியர் தொடர்பாக எந்தவித விதித்தளர்வும் உட்படாததால், அன்னாரது பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 22.10.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு மீன்துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களது பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. அரசின் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் மேலே பத்தி 1–இல் உள்ள மீன்துறை இயக்குநரின் கருத்துருவை ஏற்று, தனியர் பொருட்டு விதித்தளர்வு ஏதும் செய்ய வேண்டிய தேவை இல்லாத காரணத்தினாலும், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் தற்காலிகமாக சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட செல்வி. பா.காயத்திரி என்பவர் அவர் பணியில் சேர்ந்த நாளான 22.10.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இளநிலை உதவியாளர் செல்வி. பா.காயத்திரியின், பணியானது 22.10.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், விதிகளின்படி அவற்றை பெறத் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அ.சா.எண்.14408/ Q1/2019-1, நாள் 20.09.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் அ.சா.எண்.32118/ஜி2/2019-1, நாள் 27.09.2019-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மீன்துறை இயக்குநர், சென்னை-35.
✓செல்வி. பா. காயத்திரி, இளநிலை உதவியாளர்,
(மீன்துறை இயக்குநர் மூலமாக).

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiru... 4/10/2019
பிரிவு அலுவலர்
3/10/19